*13*

# கடைசி காரியங்களைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

*ஹிரோஷிமா மற்றும் நாகாசாகி நகரங்களின் மீது 1945ல் வீசப்பட்ட அணுகுண்டு சேதத்திலிருந்து, அப்படியொரு அழிவு மீண்டும் வந்துவிடக் கூடாது என்கிற அச்சத்திலேயே உலகம் வாழ்ந்து கொண்டுள்ளது. இந்த கோளில் வாழும் அனைத்து ஜீவராசிகளையும் அழிக்கும் சக்தியை மனிதவர்க்கம் கொண்டுள்ளது. இதன் விளைவாக, கிறிஸ்தவர்களாகத் தங்களை அறிவித்துக் கொள்ளாதவர்கள் கூட நாம் "கடைசி நாட்களில்" வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நம்புகின்றனர். ஒரு கூட்ட விஞ்ஞானிகள் "இறுதி நாள் கடிகாரம்" என்று ஒரு கருத்துக் கணிப்பு மணிகாட்டியை நிறுவினர். அந்த உத்தேசமான கடிகாரத்தின் முட்கள் நள்ளிரவுக்கு பத்து நிமிடம் இருக்கும் நிலையில் வைக்கப் பட்டு பல பத்தாண்டுகளுக்கு மேலாக இருக்கின்றது. கடிகாரம் பன்னிரெண்டு மணியைத் தொட்டதும், மனித வர்க்கத்தின் நாட்கள் முடிந்தது எனும் உட்கருத்துடன் அது அமைக்கப் பட்டது. திருமறையும் நாம் "கடைசி நாட்களில்" வாழ்ந்து கொண்டுள்ளோம் என்று போதிக்கிறது. இந்த உலகம் அழிவுண்டு போகும் நேரம் வந்து கொண்டுள்ளது. பிறகு என்ன நடக்கும்?*

*முடிவு காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பது குறித்து ஜனங்களுக்குள்ளே வித்தியாசப்பட்ட நம்பிக்கைகள் உலா வருகிறது. இந்த கோளின் முடிவே மனிதவர்க்கத்தின் முடிவு என்று சிலர் நினைக்கின்றனர். அவர்களைப் பொறுத்த மட்டில் மரணத்துக்குப் பின் ஒரு வாழ்க்கை இல்லை. இதன் எண்ணம் என்னவெனில் மனிதன் மரிக்கும் பொழுது, அவன் "சுற்றித்திரியும் நாய் - எங்கும் செத்துசிதறிக் கிடப்பது போன்றது." மற்றவர்கள் மரணத்துக்குப் பின் ஒரு வாழ்க்கை இருப்பதை ஒத்துக் கொண்டாலும், அது எப்படியிருக்கும், அனுபவிக்கப் போகிறவர்கள் யார் என்பது குறித்து ஏற்புடமை இல்லாதவர்களாயிருக்கின்றனர். உதாரணமாக சிலர் பரலோகம் இருப்பதை விசுவாசிக்கின்றனர், ஆனால் நரகம் இருப்பதை விசுவாசிப்பதில்லை. பொதுவுடமை வாதிகள் தேவன் முடிவில் எல்லாரையும் இரட்சிப்பார் என்னும் உபதேசத்தைப் போதிக்கின்றனர். ஆயிர வருட முன் அரசாட்சியைப் பற்றிப் போதிப்பவர்கள் கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வந்து நித்தியத்தை அடைவதற்குமுன், பரலோகம் நரகம் துவங்குவதற்கு முன் ஆயிரம் வருஷம் ஆட்சி செய்வார் என்கின்றனர். உத்தரிப்பு ஸ்தலம் எனும் கொள்கையை போதிப்பவர்கள் மரணத்துக்குப் பின் மனுஷன் தன் பாவங்களுக்காக பாடுபடவும் (பாவம் உத்தரிக்கப் படவும்) பிறகு பரலோகத்துக்குப் போவார்கள்*

என்கின்றனர். அவதாரத்தில் நம்பிக்கையுடையோர், ஒருவர் மரித்த பின், அவனோ அவளோ மறுபடியும் பூமியிலே வேறொரு நபராகவோ (அல்லது சிருஷ்டியாகவோ) வருவார்கள் என்று போதிக்கின்றனர்.

"கடைசி கால காரியங்களைக்"[1] குறித்து நாம் எதை விசுவாசிப்பது? நாம் இதுவரைக்கும் கற்ற பாடத் தலைப்புத் தொடருடன் இந்தப் பாடத்தைப் பொறுத்த வரையில், திருமறை சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். *கிறிஸ்து மறுபடியும் வருவார் என்றும், மரித்தவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள், பூமி அழியும், எல்லாரும் நியாயந் தீர்க்கப் படுவார்கள், பிறகு ஆத்துமாக்கள் பரலோகத்திலோ நரகத்திலோ நித்தியத்தைக் கழிப்பார்கள், என்றும் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள்.* இந்த விசுவாச அடிப்படையில் காணும் ஒவ்வொரு கருத்து நோக்கத்தையும் இன்னும் அதிக நுணுக்கமாகப் பார்ப்போம்.

## கிறிஸ்து மறுபடியும் வருகிறார்

இயேசு பரமேறி, பரலோகத்துக்குத் திரும்பி போனபின், இரண்டு தேவ தூதர்கள் அப்போஸ்தலரிடம், "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப் பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள் (நடபடிகள் 1:11). பவுல் எழுதும்போது,

> அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை ... கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் (1 தெசலோனிக்கேயர் 4:13-18).

கிறிஸ்து மறுபடியும் வருகிறார்! அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய உபதேசம் கிறிஸ்தவ விசுவாசத்தைப் போதிக்கும் முக்கியமான உபதேசங்களில் ஒன்றாகும். இயேசுவின் இரண்டாம் வருகை எப்படியிருக்கும்?

(1) *அவர் மகிமை பொருந்தினவராயும் வெற்றிசிறந்தவராயும் வருவார்.* "ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்" அவர் வருவார் (1 தெசலோனிக்கேயர் 4:16). அவர் தமது "மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதர்களோடு கூட" வருவார் (மத்தேயு 25:31; காண்க 24:30).

(2) *அவர் வெளிப்படையாய் எல்லாரும் (உலகில்) காணத்தக்க வகையில் வருவார்.* அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை அவரைப் பின்பற்றிப் போனவர்கள் பார்த்தது போலவே அவருடைய வருகையை

*ஜனங்கள் காண்பார்கள் (நடபடிகள் 1:11). யோவான் எழுதினதாவது; "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்" (வெளிப்படுத்தின விசேஷம் 1:7). "அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப் படுவார்கள்" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 25:32).*

*(3) அவர் எதிர்பாராத நேரத்தில் வருவார்.* "அவர் இரவிலே திருடன் வருகிற விதமாய் வருவார்" (1 தெசலோனிக்கேயர் 5:2; காண்க 2 பேதுரு 3:10; மத்தேயு 24:42, 44). யுகங்களினூடே இயேசு எப்பொழுது வருவார் என முன்னுரைக்க முயற்சி செய்தனர். அப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாம் பொய்யாயின; மேலும் அப்படிப்பட்ட தீர்க்கததரிசனங்கள் தொடர்ந்து பொய்யென நிரூபணமாகும்; ஏனெனில் இயேசு சொன்னார், "அந்த நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத்தேயு 24:36).

## கிறிஸ்து மறுபடியும் வரும்போது மரித்தவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள்

*கொரிந்தியர்களுக்கு பவுல், "நாம் எல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1 கொரிந்தியர் 15:51, 52) என்று எழுதினார். தெசலோனிக்கேயரிடம் அவர், "கர்த்தர் தாமே ... தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" என்றார் (1 தெசலோனிக்கேயர் 4:16).*

*''கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கும்'' மற்றவர்களுக்குமான உயிர்த்தெழுதலில் நீண்ட கால இடைவெளியினால் வித்தியாசம் இருக்கக் கூடும் என்கிற தவறான கருத்துடையவர்களாக நாம் இருந்துவிடக் கூடாது. மாறாக, எல்லாரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவார்கள் என்பதை இயேசு தெளிவாக்கினார். அவர், "இதைக் குறித்து ஆச்சரியப் பட வேண்டாம்; ஏனெனில் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" என்றார் (யோவான் 5:28, 29).*

## கிறிஸ்துவின் மறு வருகையின் போது உலகம் அழிவுண்டு போகும்

*பேதுரு இப்படியாக எழுதினார், "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம் பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்." "வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்!" (2 பேதுரு 3:10, 12ஆ).*

*ஆயிர வருட முன் அரசாட்சி உபதேசத்தை ஏற்றுக் கொள்வோர், கீழ்வரும் காரியங்கள் உட்பட அவர்கள் பல பிரச்சனைகளைக் கொண்டுள்ளனர்:*

*(1) என்னுடைய ராஜ்யம் "இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று இயேசு சொன்னார் (யோவான் 18:36). (2) இயேசுவின் இராஜ்யம் முதல் நூற்றாண்டிலேயே ஸ்தாபிக்கப்பட்டு நிலைநிற்கிறது (மத்தேயு 16:18, 19; கொலோசெயர் 1:13, 14; வெளிப்படுத்தின விசேஷம் 1:5, 6; எபிரெயர் 12:28). (3) இயேசு மறுபடியும் வரும்போது உலகம் அழிந்துபோகும் (2 பேதுரு 3:10); பூமி அழிந்து போவதால் அவர் பூமியிலே ஆயிரம் வருஷம் ஆட்சி பண்ணப் போவதில்லை (மத்தேயு 24:35). எனவே வெளிப்படுத்தின விசேஷம் 20:1-7ல் பேசப்படும் ஆயிர வருட அரசாட்சி எனும் பதம் உருவகமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் நேரடி அர்த்தமாக அல்ல.[2]*

## கிறிஸ்துவின் மறு வருகையில் எல்லாரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்

இயேசு பொதுவான நியாயந்தீர்ப்புக் குறித்து பேசினார்:

> *"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து," (மத்தேயு 25:31, 32).*

*பிற வசனங்களும் கூட ஏதோ ஒரு நாளிலே ஒவ்வொருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை சந்திக்க வேண்டும் என்று போதிக்கிறது. நாம் வாசிக்கிறோம், "... ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபிரெயர் 9:27). ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அந்த நாளில் கர்த்தர் தமது புத்தகங்களைத் திறந்து பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் - மரித்தோரையும் உயிரோடிருக்கிறவர்களையும் நியாயந்தீர்ப்பார் - சரீரத்தில் அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்கதாகத் தீர்ப்பார் (யோவான் 12:48; நடபடிகள் 17:30, 31; 2 கொரிந்தியர் 5:10; வெளிப்படுத்தின விஷேசம் 20:11-15).*

*நியாயத்தீர்ப்பைக் குறித்த அநேக கேள்விகளுக்கு திருமறை பதிலளிக்கிறது:*

கேள்வி: *நியாயத்தீர்ப்பு எப்பொழுது நடைபெறும்?*
பதில்: கிறிஸ்து மறுபடியும் வரும்பொழுது.

கேள்வி: *யார் நியாயந்தீர்க்கப் படுவார்கள்?*
பதில்: எல்லாரும்!

கேள்வி: *நியாயாதிபதி யார்?*
*பதில்: இயேசு கிறிஸ்து. பவுல் "... உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும்" (2 தீமோத்தேயு 4:1) என்றார்.*

கேள்வி: *நியாயத்தீர்ப்புக்கு அடிப்படை என்ன?*
*பதில்: பதில் இருவகைப்படும். நியாயத்தீர்ப்பு (1) இயேசுவின் வசனங்கள்*

(யோவான் 12:48) - மற்றொரு வார்த்தையில் சொன்னால், வேத வசனங்கள், மற்றும் (2) கிரியைகள், நல்லதோ கெட்டதோ நியாயந்தீர்க்கப்படுவோர் இதன் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். நியாயத்தீர்ப்பு நமது செயல்களை திருமறை போதிப்பதோடு ஒப்பிட்டு அதனடிப்படையில் செய்யப்படும். உதாரணமாக தேவையுடையோருக்கு உதவி செய்வது செய்யாமல் போவது ஆகியவைகளின் அடிப்படையில் நாம் தீர்க்கப்படுவோம் (மத்தேயு 25:31-46). நமது நியாயத்தீர்ப்பு நாம் எதிலே விசுவாசித்தோம் என்பதை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிராமல், நாம் எதைச் செய்ய பிரயாசப் பட்டோம் என்பதையோ, என்ன சொன்னோம் என்பதையோ அடிப்படையாகக் கொண்டிராமல் நாம் என்ன செய்தோம் என்ற அடிப்படையில் அமைந்திருக்கும்.

இரட்சிக்கப்பட்டோருக்கு இத்தனை நற்கிரியைகளுக்கு இவ்வளவு நித்திய ஜீவன் அளிக்கப்படும் என்ற ஒப்பந்தத்தின் பேரில் நிறைவேற்றுங் காரியங்களினால் இரட்சிக்கப்பட மாட்டார்கள். இல்லை, இரட்சிப்பு தேவனை சேவிக்க தங்களால் இயன்ற அளவு பிரயாசப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும், அது தேவனுடைய கிருபையையும் கிறிஸ்துவின் இரத்தம் அவர்களுடைய குறைகளை எடுத்துப் போட்டதையும் பொறுத்து அளிக்கப்படும். வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களை விளக்கப் படுத்தி, "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் எனப்படுகிறது" (வெளிப்படுத்தின விசேஷம் 7:14). எந்த ஒருவரும் தன்னுடைய சொந்த கிரியைகளைக் கொண்டு இரட்சிக்கப் பட முடியாது; தேவனுடைய கிருபையாலும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் மட்டுமே நம்மிலே யாராயிருந்தாலும் பரலோகத்துக்குள் போக முடியும்!

## நியாயந்தீர்க்கப்பட்டவர்கள் பரலோகத்தில் பலனளிக்கப்படுவார்கள் அல்லது நரகத்தில் ஆக்கினை அடைவார்கள்[3]

நியாயத்தீர்ப்பின் விளைவுகளை ஆடுகளை செம்மறியாடுகளிலிருந்து பிரித்தெடுப்பதற்கு ஒப்பான காட்சியில் இயேசு விளக்கப்படுத்துகிறார் (மத்தேயு 25:32-46) இரட்சிக்கப்பட்டவர்கள்,[4] வலது புறத்தில் இருப்பவர்கள், நித்தியத்தி ற்கும் பரலோகத்தின் அழகுகளையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள்:

- "ஜீவ கிரீடத்தைப்" பெறுவர் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10),
- "புதிய வானம் புதிய பூமியை" அனுபவிப்பார்கள்,
- "புதிய எருசலேமில்" ஒரு அங்கமாயிருப்பார்கள்,
- "தேவனுடைய பிரசன்னத்தில்" தாமே வாழுவார்கள்,
- "அவர்களுடைய கண்ணீர் யாவையும்" தேவன் துடைப்பார்,
- இனியும் "துக்கமோ, அழுகையோ, வியாகுலமோ அவர்களை கீழ்ப்படுத்தாது."

*வேதனைகளும் தீமைகளும் மனிதனுடைய தோற்றத்தில் இராமல் "ஒழிந்து போகும்" (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-4)!*

*அதற்கு முரணாக, தங்கள் ஆத்துமாவை இழந்தவர்கள் இடதுபுறம் இருப்பவர்களைக் குறித்து, பவுல் சொன்னார்,*

> *... தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும், நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).*

*நியாயத்தீர்ப்பு நாளில் ''அவபக்தியுள்ள அனைவரது'' அழிவையும் உள்ளடக்கியது என்று பேதுரு குறிப்பிட்டார் (2 பேதுரு 3:7; வெளிப்படுத்தின விசேஷம் 20:15யும் காண்க). நரகத்துக்கு அனுப்பப்பட்டவர்கள் எவ்வளவு காலத்துக்கு ஆக்கினையை அடைவார்கள்? அவர்கள் "நித்திய* ஆக்கினைக்குள் *போவார்கள்'' என்று இயேசு சொன்னார் (மத்தேயு 25:46; வலியுறுத்துதல் என்னுடையது). நரகத்தில் இருப்போரைக் குறித்து, வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்படுகிறது, ''அவர்களுடைய வாதைகளின் புகை* சதாகாலங்களிலும் எழும்பும்*" (வெளிப்படுத்தின விசேஷம் 14:11; வலியுறுத்துதல் என்னுடையது)! பரலோகம் எப்படி நித்தியமானதோ, அதேபோல நரகமும் நித்தியமானது! பரலோகத்தின் சிறப்புகளில் ஒன்று அங்கே சந்தோஷத்துக்கு முடிவிராது; அதே போல, நரகத்திலுள்ள மோசமான காரியங்களில் ஒன்று அதன் வேதனை குறைந்திராது, வருத்தங்கள் ஒருபோதும் ஓய்ந்திராது!*

## முடிவுரை

*1987ல், டென்னஸியிலுள்ள ஹேண்டர்ஸன் வில் என்னுமிடத்திலுள்ள லூனாலேன் கிறிஸ்துவின் சபையில் நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், ஒரு நாள் ஒரு காலை வேளையில் சபைக் கட்டிடத்திலிருந்து வெளியே வந்து அங்கே நின்றிருந்த ஒவ்வொரு காருக்குள்ளும் "1988ல் ஏன் நாம் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவோம் என்பதற்கான 88 காரணங்கள்'' என்று தலைப்பிட்ட கைப் பிரதி வைக்கப் பட்டிருந்ததை அறிய விரும்பினோம். அதன் எழுத்தாளர், அந்த வருஷத்தில், உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் "எடுத்துக் கொள்ளப் படுவார்கள்" (பரலோகத்துக்குள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்) உபத்திரவம் துவங்கும், அர்மெகதோன் யுத்தம் அடுத்து வரும், கிறிஸ்து ஆயிர வருட அரசாட்சியை ஸ்தாபிக்க பூமியில் இராஜ்யத்தை நிறுவுவார் என்று எழுதியிருந்தார். அடுத்த வாரமே நான் "1988ல் ஏன் எடுத்துக் கொள்ளப் படுதல் நடக்கப் போவதில்லை (அதற்கான அவசியமுமில்லை) என்பதற்கான எட்டு காரணங்கள்" எனும் தலைப்பில் ஒரு பிரசங்கத்தைச் செய்தேன். 1988ம் வந்தது, கிறிஸ்துவின் வருகை சம்பவியாமலேயே கடந்தும் போயிற்று, அந்த கைப் பிரதியை எழுதியவர் அவருக்கு முன் எழும்பிய கள்ளத் தீர்க்கதரிசிகளைப்*

போலவே அவரும் தவறானவர் என்பது தெளிவாயிற்று.

நாம் மிக எளிதாக தவறான போதனைக்குட் படும்படியான நோக்கில் ஏராளமான கள்ள உபதேசங்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த கள்ள தீர்க்கதரிசனங்களும் வந்து கொண்டுள்ளன. கிறிஸ்து இதுவரைக்கும் வரவில்லை, அவர் அநேகமாக வரமாட்டார் - குறைந்த பட்சம், நமது வாழ்நாளில் வரமாட்டார், என்று நாம் நினைக்கக் கூடும் (காண்க 2 பேதுரு 3:3-10). ஆதலால் கடைசிகால காரியங்கள் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கு மேலும் ஒரு உண்மையைக் காண வேண்டும்: *கிறிஸ்து எந்த நேரத்திலும் வரக்கூடும்!* இந்த உண்மையை நாம் மனதில் கொண்டிராவிட்டால், 1 தெசலோனிக்கேயர் 5:3ல் பவுல் குறிப்பிடுபவர்களைப் போல நாம் மாறிவிடக் கூடும்: "சமாதானமும் சௌக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்; அவர்கள் தப்பிப் போவதில்லை!" "அந்த நாள் [நம்மை] திருடனைப் போல பிடித்துக் கொள்ளத் தக்கதாக நாம் அந்தகாரத்தின் பிள்ளைகளல்லவே" (1 தெசலோனிக்கேயர் 5:4). மாறாக, நாம் ஆயத்தமாயிருக்க இயேசுவின் கட்டளைகளை பின்பற்றுவோமாக. மனுஷகுமாரன் (நாம்) நினையாத நாழிகையில் வருவார், ஆதலால் (மத்தேயு 24:44), நாம் தொடர்ந்து ஆயத்தமாயிருப்போம்.

கடைசிகால சம்பவங்கள் குறித்து நாம் அறிந்திருக்கும் சத்தியங்கள் இவைகளே: கிறிஸ்து வருவார்! மரித்தோர் எழுந்திருப்பார்கள்! பூமி அழியும்! நாம் நியாயந்தீர்க்கப்படுவோம்! ஒவ்வொருவரும் பரலோகத்திலோ நரகத்திலோ பங்கடைவோம்! இந்த வாக்கியங்களை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் உங்கள் விசுவாசத்தின்படியே நீங்கள் வாழவேண்டியது அவசியம்!

---

குறிப்புகள்

[1]இறுதிக் காரியங்களைப் பற்றிய (கடைசிக் கால) கல்விக்கு நுட்பமான வார்த்தை "இறுதி சம்பவங்கள்" (எஸ்காட்லாஜி) என்பது, *எஸ்காட்டோஸ்* எனும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது, அதன் பொருள் "கடைசி." [2]இப்படிப்பட்ட முடிவுரையில் ஆச்சரியப்படக்கூடாது, ஏனெனில் வெளிப்படுத்தின விசேஷம் உருவகங்கள் நிறைந்த ஒரு புத்தகம். [3]ஆத்துமா புனிதப்படுத்தப்படும் இடம் (உத்தரிப்பு ஸ்தலக் கொள்கை) போதனைகளையும், பரலோகத்திற்குள் போவதற்கு முன் பூமியிலே வேறு ஒரு நபராகவோ அல்லது அவதாரம் எடுத்தோ சில காலம் பூமியில் தங்கியிருப்பதாகக் கூறும் போதனைகளையும் பொய்யாக்குகிறது. [4]கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் நியாயத் தீர்ப்பும் சிலருடைய இரட்சிப்பாக முடியும், திருமறை சொல்லுகிறது, "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப் பட்டு, தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும் படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபிரெயர் 9:28).